## கலைப்பயில்வு (Art Practice)

ஜஸ்டின் மெக்கார்த்தி, நீலம் மான்சிங், கீதாஞ்சலி ராவ், சஞ்சய் காக் ஆகியோரைக் கொண்ட புலமைத்துவக் குழுவினர் 2020ஆம் ஆண்டில் கலைப்பயில்வுத் திட்டத்தினை மதிப்பீடு செய்தனர். இம்மதிப்பீட்டுப் படிமுறைக்கு முதன்மைத் தரவுகளாக, இந்தியாவில் நிலவி வருகின்ற கலைப்பயில்வுப் புலம், அதற்கான புரவலத்தன்மை ஆகியவற்றின் தற்போதைய சூழலில் கலைகள் எம்மாதிரியான ஆதரவினை வேண்டி நிற்கின்றன என்பன தொடர்பான கருத்துக்களைக் கோரிப் பெற்றோம் (விபரங்களுக்குக் காண்பியக் கலைகளும் திரைப்படங்களும் மற்றும் ஆற்றுகையும் இலக்கியமும் ஆகியவை தொடர்பான கள ஆய்வு அறிக்கைகளிலிருந்து வெளிப்படும் எங்களின் குரல்களையும் பதிவுகளையும் தயைகூர்ந்து பார்க்கவும்). இவற்றின் அடிப்படையில், புலமைத்துவக் குழு தனது பரிந்துரைகளைத் தயாரித்து ஐ.எஃப்.ஏ.விற்கு வழங்கியது. இப்பரிந்துரைகளிலிருந்து முகிழ்த்ததே மீள்கையாளுகைக் கலைப்பயில்வுத் திட்டம்.

கலைப் பயில்வுத் திட்டம் (Art Practice Programme) கலைஞர்கள் தங்களின் தற்போதைய பயில்வுகளின் வீச்சுக்களை, பரப்பெல்லைகளைப் புதிய நோக்கில் விரிவுபடுத்த உதவும் வேலைத்திட்டங்களைச் (project) செயற்படுத்த முற்படுகின்றது. இவ்வேலைத்திட்டங்கள் மரபாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறைகளைக் கேள்விக்குட்படுத்துவதாகவோ, வடிவம், உள்ளடக்கம், ஊடகம் போன்றவற்றில் புதிய எல்லைகளை நகர்த்தக் கூடியதாகவோ, வெளி, பார்வையாளர்கள், சமூகங்கள் ஆகியவற்றின் மீது கொண்ட ஈடுபாடுகளில் புதிய அணுகுமுறைகளைக் கண்டறியக் கூடியதாகவோ, சோதனை முயற்சிகளை வெளிப்படுத்தக் கூடியதாகவோ அமையலாம்.

புத்தம்புதிய எண்ணப்போக்குகளையும் கருத்துக்களையும் ஆராய்தல், ஒரு கலைப்படைப்பைத் தயாரித்தல், கருத்தரங்குகள், கலைஞர் வதிவிடம், பட்டறைகள் ஆகியவற்றின் ஊடாக கருத்துப் பரிமாற்றத்திற்கும் உரையாடலுக்குமான வெளிகளை உருவாக்குதல், கலைஞர்களிடையே ஒருமைப்பாட்டினைக் கட்டமைக்க முயலும் வகையிலான தளங்களை வளர்த்தெடுத்தல் போன்ற வடிவங்களில் வேலைத்திட்டங்கள் அமையலாம்.

ஆங்கிலத்தைக் காட்டிலும், பிற இந்திய மொழிகளில் மேற்கொள்ளப்படும் படைப்பாக்கங்களையும் ஒரு பயில்விற்குள்ளேயும் பல பயில்வுகளின் ஊடேயும் செய்யப்படுகின்ற ஆக்கங்களையும் ஐ.எஃப்.ஏ. ஊக்கப்படுத்துகின்றது. மாதிரித் திட்ட முன்வரைவுகளை எழுத்து வடிவிலோ, ஒலி அல்லது காட்சி வடிவிலோ எங்களுக்கு அனுப்பி, ஐ.எஃப்.ஏ. அலுவலர்களுடன் விவாதித்து, உங்களின் திட்ட முன்வரைவுகளை முழுமையானதாக உருவாக்கலாம்.

கலைப்பயில்வுத் திட்டம் கீழ்க்கண்ட பிரிவுகளில் வேலைத்திட்டங்களைச் செயற்படுத்த முனைகின்றது

### 1. கலைத் தேடல்கள் (Explorations):

புத்தம் புதிய, இடர் நிறைந்த அல்லது இதற்குமுன் யாரும் ஈடுபடாத கருத்தோட்டங்களை, எண்ணங்களை நுணுகி ஆராய்தல், பரிசோதித்தல், ஊடாடுதல். இத்தகைய செயல்பாடுகள் ஒரு கலைப்படைப்பை உருவாக்குவதற்கு இட்டுச் செல்லலாம். அல்லது அவ்வாறு நடை பெறாமலும் போகலாம். ஆய்வு மேற்கொள்ளுதல், வசனம் எழுதுதல், நெரிசல் கலை (jamming), கதைப்பலகை (Storyboarding), ஒத்திகை செய்தல், மாதிரிகளை உருவாக்குதல் (sampling), இன்னும் எண்ணங்களைச் சோதிப்பதற்கு ஏதுவான பிற வகையான கலைத்தேடல்களில் ஈடுபடுதல் போன்றவற்றை உள்ளடக்கியதாக இவை அமையலாம்.

**வரவு செலவுத் திட்ட அளவு**: அதிகப்படியாக ரூபாய் 75,000 வரை
**விண்ணப்பக் காலம்**: திட்ட முன்வரைவுகளுக்கான பொது அறிவிப்பின் மூலம் வருடத்திற்கொருமுறை திட்டமுன்வரைவுகள் வரவேற்கப்படுகின்றன.

**2. தயாரிப்புகள் (Productions):**

இத்திட்டங்கள் ஆற்றுகை (நிகழ்த்துதல்), ஒலி, ஒளி (காட்சி அல்லது காண்பிய வடிவம்), டிஜிட்டல், இலக்கியப் படைப்புகள் அல்லது இவை போன்ற வடிவங்களை உள்ளடக்கக் கூடிய பல்துறைசார் படைப்புக்கள் முதலியவற்றை உருவாக்குதல். இவை நாடகம், நடனம் மற்றும் இசை நிகழ்த்துகைகள், நிறுவல் கலை (installation), கண்காட்சி, புத்தகம், சிற்றேடுகள் போன்ற பிற பதிப்புகள், திரைப்படம் மற்றும் நகரும் படிம அளிக்கைகள் (moving image presentations), விளையாட்டுகள், இண்ட்டர்பேஸ் (interfaces) உள்ளிட்ட பிற டிஜிட்டல் கலைப்படைப்புக்கள், இன்னும் கற்பனை செய்யப்படுகின்ற பிற படைப்பாக்க வடிவங்கள் போன்றவை குறித்த திட்டங்களை உள்ளடக்கியதாக இருக்கலாம்.

**வரவு செலவுத் திட்ட அளவு**: அதிகப்படியாக ரூபாய் 5,00,000 வரை
**விண்ணப்பக் காலம்**: திட்ட முன்வரைவுகளுக்கான பொது அறிவிப்பின் மூலம் வருடத்திற்கொருமுறை திட்டமுன்வரைவுகள் வரவேற்கப்படுகின்றன.

**3. கருத்துப் பட்டறைகள், கலைஞர் வதிவிடம் (Residency), கருத்தரங்குகள்:**

கருத்துப் பரிமாற்றம், உரையாடல், விவாதம், கற்றல், வழிநடத்தல் (mentorship) ஆகியவற்றை வளர்த்தெடுக்கும் சூழல்களையும் நிலைமைகளையும் உருவாக்குதல். கலைஞர்களைச் செழுமைப்படுத்த உதவுகின்ற, கூட்டுப்படைப்பாக்கத்தை ஊக்குவிக்கின்ற, பரிசோதனைகளுக்குத் துணை புரியும் வகையிலான கலைஞர் வதிவிடங்கள்; கலை குறித்த அறிவை வளர்த்தெடுக்கவும், புதிய பார்வைகளை உருவாக்கவும் கலைப்பயில்வுகளை விரிவுபடுத்தவும் உதவுகின்ற வகையிலான கருத்துப் பட்டறைகள், கருத்தரங்குகள் அல்லது இவை போன்ற வேறு வடிவிலான கூடுகைகள் முதலியவற்றை ஒழுங்கமைத்தல்

**வரவு செலவுத் திட்ட அளவு**: அதிகப்படியாக ரூபாய் 3,00,000 வரை
**விண்ணப்பக் காலம்**: திட்டமுன்வரைவுகள் வருடந்தோறும் வரவேற்கப்படுகின்றன.

**4. கலைத்தளங்கள் (Arts Platforms):**

கலைஞர்களிடையே ஒருமைப்பாட்டினை வளர்த்தெடுத்தல், அவர்களின் படைப்பாக்கத்தன்மையை மேம்படுத்துதல், அவர்களுடைய கலைப்பயில்வுகளை நீடித்து நிலைக்கச் செய்தல் முதலிய நோக்கங்களுடன், ஒரு பயில்வில் அல்லது பல பயில்வுகளின் ஊடாக இயங்கும் கலைஞர்களை ஒரு தளத்தில் ஒருங்கிணைக்க ஏதுவான இடம் சார்ந்த அல்லது வேறு வடிவிலான வெளிகளையும் இணைப்புத்தளங்களையும் வளர்த்தெடுத்தல் மற்றும் ஊக்குவித்தல்.

**வரவு செலவுத் திட்ட அளவு**: அதிகப்படியாக ரூபாய் 1,50,000 வரை
**விண்ணப்பக் காலம்**: திட்டமுன்வரைவுகள் வருடந்தோறும் வரவேற்கப்படுகின்றன.

(ஐ.எஃப்.ஏ.வின் மூலம் ஏற்கனவே செயல்படுத்தப்பட்ட படைப்பாக்கங்களைப் பரவலாக்கம் செய்ய நிதி இருக்கின்றது. திட்ட அலுவலர்களுடனான ஊடாட்டங்களின் மூலம் இத்தகைய வேலைத்திட்டங்களுக்கு வடிவம் கொடுக்கலாம். ஒவ்வொரு வேலைத்திட்டத்தைப் பொறுத்து அதற்கான வரவு செலவுத் திட்ட உச்ச வரம்பு அமையும்.)

**யார் யாரெல்லாம் விண்ணப்பங்களை அனுப்பலாம்?**

ஒரு கலைப்புலம் சார்ந்தோ அல்லது பல்வேறு புலங்களின் ஊடாகவோ இயங்குகின்ற கலைஞர்களிடமிருந்து இத்திட்டத்திற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. அவை பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக இருக்கலாம்.

- இசை, ஒலி, பனுவல், நடனம், உடலியக்கம், அரங்கம், பாவைக்கூத்து, கதைசொல்லல், மாயவித்தை (magic), சர்க்கஸ் (circus), இன்னும் பிற நிகழ்த்துக்கலைகள் சார்ந்த நிகழ்த்துக்கலைஞர்கள்.

- திரைப்படம் (ஆவணப்படம் மற்றும் புனைவுப்படம்), சலனச் சித்திரம் (animation), புகைப்படம், நிறுவல் கலை (installation), புது ஊடகக் கலை (new media), செயற்கை நுண்ணறிவு, ரோபோட்டிக்ஸ், ஊடாட்டக்கலைகள், மின் ஊடக விளையாட்டு (gaming), ஓவியம், சிற்பம், அச்சுக் கோர்த்தல், சித்திரப் புத்தகம், வரைகலைக் கதையாடல்கள், கலைஞர் புத்தகம் இன்னும் பிற காண்பியக் கலை வடிவங்கள் சார்ந்து இயங்கும் காண்பியக் கலைஞர்கள்.

- கலைக்காட்சிக் கூடங்களுக்கு வெளியே இயங்கும் எடுத்தாளுனர்கள் (curators)

- இலக்கியப்படைப்புகளுடன் இயங்கும் கவிஞர்கள், எழுத்தாளர்கள், நாவலாசிரியர்கள், நாடக ஆசிரியர்கள்

- பல்துறைப் படைப்பாக்கங்களில் ஈடுபட்டுள்ள கலைப்பயிற்றுநர்கள், கலைஞர்கள்

**தகுதி:**

இந்தியக் குடிமக்கள் அனைவரும் திட்ட முன்வரைவுகளை அனுப்பத் தகுதியுடையவர்கள். விண்ணப்பிப்பவர்கள் மட்டுமல்லாது அவர்களுடன் சேர்ந்து இத்திட்டங்களில் உடனியங்க இருக்கும் பிற பங்கேற்பாளர்களும் இந்தியக் குடிமக்களாக இருக்க வேண்டும். மேலும் விபரங்களுக்கு, இங்கே சொடுக்கவும்.

ஏதாவது ஐயங்கள் அல்லது கேள்விகள் இருப்பின், தயைகூர்ந்து sumana@indiaifa.org என்ற மின்னஞ்சல் முகவரியில் சுமனா சந்திரசேகருக்கு அல்லது john@indiaifa.org என்ற மின்னஞ்சல் முகவரியில் ஜான் சேவியர்ஸுக்கு எழுதுங்கள்.

**நீங்கள் கீழ்க்கண்ட முகவரிக்கும் எழுதலாம்.**

**Programme Officer, Arts Practice**,
India Foundation for the Arts,
Apurva Ground Floor, No. 259, 4th Cross,
Raj Mahal Vilas 2nd Stage, 2nd Block,
Bangalore – 560094,
Phone: 080 – 2341 4681/82